*This Question Paper contains 16 printed pages.*
***(Part - A & Part - B)***

Sl.No. 0200014

# 07(T)

**(MARCH, 2017)**

| |
|---|
| પ્રશ્ન પેપરનો સેટ નંબર જેની સામેનું વર્તુળ OMR શીટમાં ઘટ્ટ કરવાનું રહે છે. |
| **Set No. of Question Paper circle against which is to be darken in OMR sheet.** |
| **02** |

**Part - A : Time : 1 Hour / Marks : 50**

**Part - B : Time : 2 Hours / Marks : 50**

## (Part - A)

***Time : 1 Hour]*** ***[Maximum Marks : 50***

குறிப்பு :

1) பகுதி A-யில் 50 வினாக்கள் (M.C.Q.) உள்ளன. அனைத்து வினாக்களுக்கும் கண்டிப்பாக விடையளித்தல் வேண்டும்.
2) 01 முதல் 50 வினாக்கள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.
3) ஒவ்வொரு வினாவையும் கவனமாகப் படித்து, அதற்கான பதிலை O.M.R. விடைத்தாளில் நிரப்பவும்.
4) சரியான பதிலைத் தெரிந்து, (A) O, (B) O, (C) O, (D) O, (●) வட்டத்தில் O.M.R. விடைத்தாளில் நிரப்பவும்.
5) கேள்வி தாள் மேல் மிக வலது பக்கத்தில் அச்சிடப்பட்ட கேள்வி தாள் எண்ணிக்கை அமைக்க O.M.R. தாள் வழங்கப்படும் பத்தியில் எழுதியுள்ளார் வேண்டும்.

## PART - A

1) 'கொளல்' ________ இச்சொல்லுக்கு இலக்கணக் குறிப்பெழுதுக.

(A) வினையெச்சம்

(B) இடைக்குறை

(C) வினைச்சொல்

(D) தொழிற்பெயர்

2) ‘திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த
தமிழுடன் பிறந்தோம் நாங்கள்’
_____ என்று பழஞ்சிறப்பினைப் பாடியவர் _____

(A) வாணிதாசன்
(B) விடுதலைக் கவி பாரதியார்
(C) பாவேந்தர் பாரதிதாசன்
(D) கவிஞர் வாலி

3) அப்பூதியடிகள் _____ தோன்றியவர்

(A) சீர்காழி
(B) கஞ்சனூர்
(C) ஆலங்குடி
(D) திங்களூரில்

4) ‘ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப் பந்தரில் நும்பேர் எழுதாதே’
_____ எனக் கேட்டவர் யார் ?

(A) திருநாவுக்கரசர்
(B) அப்பூதியடிகள்
(C) சேக்கிழார்
(D) சிவபெருமான்

5) பொய்ப்பொருளை விலக்கி மெய்ப்பொருளாகிய சிவபெருமானைத் துதித்தவர் யார் ?

(A) எறிபத்தர்
(B) அப்பர்
(C) மாணிக்கவாசகர்
(D) சிறுத்தொண்டர்

6) திருக்குறள் _____ வெண்பாக்களால் ஆன நூலாகும்

(A) இன்னிசை

(B) நேரிசை

(C) சிந்தியல்

(D) குறள்

7) 'ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்' _____ இவ்வுண்மையைக் கூறும் நூல் எது ?

(A) சிலப்பதிகாரம்

(B) பெரியபுராணம்

(C) ஆசிய ஜோதி

(D) மணிமேகலை

8) 'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே ' _____ யார், யாரிடம் கூறியது ?

(A) கோவலன், பாண்டியனிடம்

(B) கண்ணகி, சோழனிடம்

(C) கண்ணகி, காவலனிடம்

(D) கண்ணகி, பாண்டியனிடம்

9) உலக இலக்கியங்களுள் முதன்மை வெற்றுள்ளவை ________

(A) வேதங்கள்

(B) பக்தி இலக்கியங்கள்

(C) இதிகாச இலக்கியங்கள்

(D) சங்க இலக்கியங்கள்

10) போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் ________

(A) இளம்பெருவழுதி

(B) அதிவீரராம பாண்டியன்

(C) நலங்கிள்ளி

(D) இராம பாண்டியன்

11) 'நடுவண் அரசு' எந்த ஆண்டு தமிழைச் செம்மொழியாக ஏற்பளித்தது ?

(A) 2004 ஆம் ஆண்டு

(B) 1992 ஆம் ஆண்டு

(C) 1987 ஆம் ஆண்டு

(D) 1990 ஆம் ஆண்டு

12) பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் ________

(A) யுனானி

(B) ஆயுர்வேதம்

(C) அலபதி

(D) சித்தமருத்துவம்

13) இளைஞர்களின் உள்ளத்தில் ________ மொழிப்பற்றும், தெய்வப்பற்றும் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும்.

(A) இனப்பற்று

(B) சமுதாயப்பற்று

(C) வீட்டுப்பற்று

(D) நாட்டுப்பற்று

14) தமிழர்கள் நிலத்தை ________ வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.

(A) ஐந்து (B) ஆறு

(C) மூன்று (D) நான்கு

15) 'சொற்கோவிலும், கற்கோவிலும்' எழுப்பியவர் யார் ?

(A) சேக்கிழார்

(B) கவிமணி

(C) மாற நாயனார்

(D) பெ. சுந்தரனார்

16) பாண்டிய நாட்டில் இருந்த துறைமுகத்தின் பெயர் என்ன ?

(A) நாகப்பட்டினம்

(B) விசாகப்பட்டினம்

(C) தூத்துகுடி

(D) கொற்கை

17) முதல் மாந்தன் தோன்றிய இடம் ________

(A) வங்காளம்

(B) ஹிமாலயம்

(C) லெமூரியாக்கண்டம்

(D) குமரிக்கண்டம்

18) தீதும், நன்றும் ________

(A) நன்மை தரும்

(B) பிறர் தர வாரா

(C) தீமை தரும்

(D) தனம் தரும்

19) 'நடுவன் அரசு' பரிதிமாற் கலைஞருக்கு ________ வெளியிட்டுச்சிறப்பித்தது

(A) விருது

(B) அன்பளிப்பு

(C) உருவச்சிலை

(D) அஞ்சல் தலை

20) பாண்டிமாதேவியின் காற்சிலம்பைக் களவாடியவன்

(A) கோவலன்

(B) வழிப்போக்கன்

(C) பொற்கொல்லன்

(D) அந்தப்புறப் பணிப்பெண்

21) ‘பெண்ணணங்கு’ ________ சொல்லைப் பிரித்தெழுதுக.

(A) பெண் + அங்கு

(B) பெண் + அனங்கு

(C) பொன் + அனங்கு

(D) பெண் + அணங்கு

22) சொற்கள் ஒன்றுபட்டு நிற்கும், பிரித்தால் பொருள் தராது. அது ___ எனப்படும்.

(A) இரட்டைக்கிளவி

(B) அடுக்குத்தொடர்

(C) உவமேயம்

(D) உருவகம்

23) எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ அங்கே ____ மறைந்து விடும்.

(A) பண்பு

(B) மணிதப் பண்பு

(C) அன்பு

(D) அருள்

24) ஏழைப் பெற்றோர்கள் தம் வறுமையைப் போக்க, குழந்தைகளை ________ அனுப்புகின்றர்.

(A) கோயிலுக்கு

(B) பள்ளிக்கு

(C) வேலைக்கு

(D) பூங்காவிற்கு

25) ஆய கலைகள் ________ என்பர்.

(A) 42

(B) 10

(C) 20

(D) அறுபத்து நான்கு

26) சேக்கிழார் ________ தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தார்.

(A) குலோத்துங்கனிடம்

(B) சிபியிடம்

(C) அநபாயச்சோழனிடம்

(D) மனுநீதிச் சோழனிடம்

27) ஒளிப்படம் எடுக்கும் முறையை ________ ஆண்டு கண்டுபிடித்தனர்.

(A) 1854

(B) 1862

(C) 1830

(D) 1874

28) பாக்கள் ________ வகைப்படும்.

(A) மூன்று (B) ஆறு

(C) நான்கு (D) ஐந்து

29) போலிப்புலவர்களின் தலையை வெட்டுபவர் ________

(A) ஒட்டக்கூத்தன் (B) பிள்ளைப் பாண்டியன்

(C) நலங்கிள்ளி (D) வில்விப்புத்தூரார்

30) இன்றைய ________ தாய் நம் தமிழிசையே.

(A) கிராமிய இசை

(B) மேற்கித்திய இசை

(C) கர்நாடக இசைக்குத்

(D) கிழக்கித்திய இசை

31) தமிழர் புகழெனில் ________ கொடுக்க முனைந்தனர்.

(A) உயிரும்

(B) அன்பும்

(C) அருளும்

(D) பாசமும்

32) 'கேண்மை' என்பதன் சொற்பொருள் ________

(A) அறிவு (B) ஆசை

(C) அழகு (D) நட்பு

33) சரிந்த குடலைப் புத்தத் துறவியர் சரி செய்த செய்தியை ________ எடுத்துரைக்கிறது.

(A) தேவாரம்

(B) திருப்பாவை

(C) மணிமேகலை

(D) திரிகடுகம்

34) இறைவனின் திருத்தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய நூல் ________

(A) தல புராணம்

(B) தேம்பாவணி

(C) சீறாப்புராணம்

(D) சிவ புராணம்

35) காந்தியடிகள் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ________ என்ற ஒரு நாடக நூலைப் படித்தார்.

(A) பிரகலாதன் கதை

(B) கந்த புராணம்

(C) அரிச்சந்திர புராணம்

(D) சிரவண பிதுர்பத்தி

36) உலகோர் அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால், உலகமே ஒரு நல்ல ________ உருவாகும்.

(A) நாகரிகம்

(B) புரட்சி

(C) புதுமை

(D) சமுதாயமாக

37) அறிவு எனப்டுவது ________ சொல் பொறுத்தலாகும்.

(A) அன்பிலார்

(B) அறிவிலார்

(C) இரக்கம் இலாதார்

(D) பண்பிலார்

38) 'மீன்நோக்கும், நீள்வயல் சூழ் வித்துவக்கோட்டம்மாளன்' எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல் ________ .

(A) திருவெம்பாவை

(B) திருவருட்பா

(C) திருப்பாவை

(D) நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம்

39) மார்கழி, தை ஆகிய இரண்டும் ________ காலத்திற்குரியன.

(A) முன்பணி
(B) முதுவேனில்
(C) இளவேனில்
(D) பின்பணி

40) புகழ்வது போலப் பழிப்பது ________ ஆகும்.

(A) சிலேடை அணி
(B) பின்வரு நிலையணி
(C) வஞ்சப் புகழ்ச்சி அணி
(D) மடக்கணி

41) கருமை + குழி என்பது ________ எனும் விதிகளின்படி புணரும்

(A) ஈறுபோதல், ஆதி நீடல்
(B) ஆதிநீடல், இனமிகல்
(C) ஈறுபோதல், இனமிகல்
(D) தன்னொற்றிரட்டல், இடையுகரம் 'இ' ஆதல்.

42) பாம்போ ? கயிறோ ? எவ்வகை வினாவைக் குறிக்கும் ?

(A) அறிவினா
(B) அறியா வினா
(C) ஏவல் வினா
(D) ஐய வினா

43) மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ________

(A) வஞ்சித்திணை
(B) காஞ்சித்திணை
(C) தும்பைத்திணை
(D) வாகைத்திணை

44) 'தணியொருவனுக்கு உணவில்லையெனில் இந்தச் சகத்தினை அழித்திடுவோம்' என்று பாடியவர் ________

(A) வாணிதாசன்
(B) வாலி
(C) பாரதியார்
(D) பாரதிதாசன்

45) ______ நூற்றாண்டைத் 'தமிழின் மறுமலவர்ச்சிக் காலம்' என அறிஞர் போற்றுவர்.

(A) பதினான்காம் (B) பதினாறாம்
(C) இருபதாம் (D) பத்தொன்பதாம்

46) சங்க காலத்தில் ஒரு முல்லைக் கொடியின் துயர் நீக்க, ________ தன் தேரையே ஈந்தான்.

(A) பாரி வள்ளல் (B) பேகன்
(C) காரி (D) ஓரி

47) 'அகத்தே கறுத்துப் புறத்து வெளுத்து இருந்த உலகர் அனைவரையும் சகத்தே திருத்த' இறைவன் தம்மை வருவிக்க உற்றதாகக் கூறியவர் ________

(A) பாரதியார் (B) சேக்கிழார்
(C) வள்ளலார் (D) அப்பர்

48) நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடி ________ வரும்.

(A) ஐஞ்சீராய் (B) முச்சீராய்
(C) நாற்சீராய் (D) ஆறுசீராய்

49) புறத்திணைகள் ________ வகைப்படும்.

(A) பன்னிரண்டு (B) ஏழு
(C) ஐந்து (D) பத்து

50) திருநாவுக்கரசர் காலம் ________ ஆம் நூற்றாண்டு

(A) கி.பி. 9 (B) கி.பி. 7
(C) கி.பி. 12 (D) கி.பி. 16

# 07(T)

**(MARCH, 2017)**

## (Part - B)

*Time : 2 Hours]* *[Maximum Marks : 50*

குறிப்பு :

1) ஒரு தெளிவான கை எழுத்து எழுது.
2) பகுதியில் நான்கு பிரிவுகள் உள்ளன - கேள்வி தாள் மற்றும் மொத்த B1 முதல் 21 கேள்விகள் உள்ள.
3) அனைத்து கேள்விகள் உள்ளன உள் விருப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4) வலது பக்க எண்கள் கேள்விகளுக்கு மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
5) புதிய பக்கம் புதிய பிரிவை துவக்கவும்.
6) பகுவரிசை பராமரிக்கவும்.

## SECTION - A

■ ஆறு வரிகளில் விடையளி [8]

1) மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை ?

2) பெண்ணுரிமையை விளக்குக.

3) கனிமவியல் அறிவு பற்றி எழுதுக.

4) இராணுவம், காவல் முதலிய பணிகளில் சேர்வதற்கான தகுதிக் கூறுகள் யாவை ?

<u>சுருக்கமாக விடையளி</u> [2]

5) 'கள்வனைக் கோறல் கடுங்கோலன்று' _______ யார், யாரிடம் கூறியது ?

6) 'அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள், உளரானோம்' _______ யார், யாரிடம் கூறியது ?

<u>கோடிட்ட இடங்களை நிரப்புக</u> [2]

7) 'ஆடத்தெரியுமா' என்னும் வினாவிற்குப் பாடத்தெரியும் எனக் கூறுவது _____ விடை.

8) திருவாசகத்திற்கு உருகார் _____ உருகார்.

## SECTION - B

■ <u>ஐந்தாறு வரிகளில் விடையளி</u> [6]

9) பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுவர் யார் ?

10) 'கம்பராமாணம்' _____ சிறு குறிப்பு எழுதுக.

11) போலிப் புலவர்களைத் தண்டிப்போர் யாவர் ?

**கீழுள்ள வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளி :** [4]

12) அப்பூதியடிகளார் அமைத்த தண்ணீர்ப் பந்தலைக் கண்டு நாவுக்கரசர் வியப்புறக் காரணம் என்ன ?

13) நந்திவர்மன் பெருமைகளாக நந்திக் கலம்பகம் கூறுவன யாவை ?

**சுருங்கிய விடையளி :** [3]

14) குறிஞ்சித் திணைக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது யாது ?

15) அறுவகை வினாக்கள் யாவை ?

16) ஐம்புலன்கள் யாவை ?

## SECTION - C

17) **கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து, வினாக்களுக்கு விடை எழுதுக.** [5]

'எப்படியும் வாழ்வதுதான் வாழ்க்கை என்றே
எண்ணுபவன் பொறுப்பற்ற மனிதன் ஆவான்;
இப்படித்தான் நாம்வாழ வேண்டுமென்றே
எண்ணுபவன் சமூகத்தில் உயர்ந்தவன் ஆவான்;
உப்பாக இருந்தாலும் நீரானாலும்
உபயோகப் படுத்துவதில் அளவு வேண்டும்;
அப்படி நாம் அளவறிந்து பயன்படுத்தும்
அதன் பெயரே சிக்கனமாம் அறிந்து கொள்வீர் !'

<u>வினாக்கள்</u>

1) பொறுப்பற்ற மனிதன் யார் ?

2) பாடலுக்கு ஏற்ற தலைப்பு ஒன்று தருக.

3) சமூகத்தில் உயர வேண்டும் என்றால் எண்ணம் எப்படி அமைய வேண்டும் ?

4) பொருள்களை உபயோகப் படுத்துவதில் என்ன வேண்டும் ?

5) 'சிக்கனம்' ________ விளக்கம் தருக.

OR

மேலே கொடுக்கப்பட்டுள்ள பாடலின் திரண்ட கருத்தினை எழுதுக.

18) அம்பேத்காரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்து எழுதுக. [3]

OR

ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

19) 'விடுநனி கடிதென்றான் ........... எனத் தொடங்கி, மெழுகானார்' என முடியும் கம்பராமாயணப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. [5]

OR

புறத்திணைகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? விளக்குக.

OR

அயோத்திதாசர் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டு குறித்து விளக்கி எழுதுக.

## SECTION - D

20) நீர் கண்டுகளித்த இன்பச் சுற்றுலா குறித்து, நின் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக. [4]

21) ஒன்றினைப் பற்றி 200 சொற்களில் கட்டுரை எழுதுக. [8]

1) விடுதலைக் கவி பாரதியார்

2) தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி

3) தேசிய ஒருமைப்பாடு

❖❖❖❖